# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 12,158 — 1960 ජූලි 15 වැනි සිකුරාද — 15.7.1960**

**12,158** ம் இலக்கம் — **1960** ம் ஆண்டு ஜூலை மாதம் **15** ந் திகதி வெள்ளிக்கிழமை

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி IV—உள்ளூர் ஆட்சி

**[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]**


| | பக்கம் |
|---|---|
| உள்ளூராட்சி அறிவிப்புகள் .. .. | — |
| பதவிகள்–வெற்றிடம் .. .. .. | 37 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — |
| துணைவிதிகள் .. .. .. | — |
| உள்ளூராட்சி அதிகாரநிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — |
| வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| வரவு செலவுத் திட்டங்கள .. .. | — |
| ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| நாணுவிதம் .. .. .. | 39 |


## பதவிகள்—வெற்றிடம்

**இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் IV ஆம் பகுதியில் விளம்பரப்படுத்தப்படும் உள்ளூராட்சிச் சேவைப் பதவிகளின் நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்**

1. **படிகள்.**—வேறுவிதம் சொல்லப்பட்டாலன்றி, வீட்டுவாடகைப்படி, தற்காலிக வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிக விசேட வாழ்க்கைப்படி ஆகியவை அரசாங்க விகிதங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கக் கொடுக்கப்படற்பாலன.

2. **சேவை நிபந்தனைகள்.**—1946 ம் ஆண்டின் 5 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் (நிலைமாறுகால ஏற்பாடுகள்) கட்டளைச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறுள்ள 1945 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், 1945 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்கக் கட்டளைச் சட்டத்திலும் அக்கட்டளைச் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட பிரமாணத்திலும் மேலும் செய்யப்படும் எதும் திருத்தங்களுக்கும், உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை காலத்துக்குக் காலம் விதிக்கும் சேவை நிபந்தனைகளுக்கும் அமைவாக நியமனங்கள் இருக்கும்.

3. **வேலைக்கமர்த்தப்படுவதற்கான நியதிகள்.**—1952 ஆம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் 8 ஆம் திகதி வெளியான 10,432 ஆம் இலக்க **இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் 4 ஆம் பகுதியில் பிரசுரிக்கப்பட்ட** அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்ட பதவிகளும் அவற்றோடு காலத்துக்குக் காலம் சேர்க்கப்படும் பதவிகளும் உள்ளூராட்சிச் சேவையில் பெண்களல்லாதாரால் வகிக்கப்படும் பொழுது 1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சிச்சேவை இளைப்பாற்றிச் சம்பளத் திட்டப் பிரமாணங்களின்கீழ் இளைப்பாற்றிச் சம்பளத்துக்குரியனவாகும்.

(அ) அரசாங்கத்தின்கீழ் சேவை செய்யும் உத்தியோகத்தர்கள், இளைப்பாற்றிச் சம்பளம் பற்றிய விதிகளின் 2 ஆம் பிரிவின்கீழ் விடுதலை செய்யப்பட்டு உள்ளூராட்சிச் சேவையின் இளைப்பாற்றிச் சம்பளத்துக்குரிய பதவிகளுக்கு மாற்றப்பட்டால், அவர்களின் இளைப்பாற்றிச் சம்பள உரிமைகள் பாதுகாத்துக் கொடுக்கப்படும்.

(ஆ) உள்ளூராட்சித் தாபனங்களில், அவற்றின் இளைப்பாற்றிச் சம்பள விதானங்கள் அல்லது விதிகளின் கீழ் இளைப்பாற்றிச் சம்பளத்துக்குரிய பதவிகளை வகிப்பவர்கள் விடயத்தில், அவர்கள் கடைசியாக இளைப்பாறும் போது கொடுக்கப்படும் இளைப்பாற்றிச் சம்பளம், 1949 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைச் (திருத்த) சட்டத்தால் திருத்தப்பட்டவாறுள்ள 1945 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின் 48 ஆம் பிரிவுக்கிணங்க, உள்ளூராட்சிச் சேவைக்கு அவர்கள் மாற்றப்பட்ட திகதிக்கு நேர்முந்தியுள்ள திகதியன்று எந்த உள்ளூராட்சித் தாபனத்தில் வேலைபார்த்தார்களோ அந்த உள்ளூராட்சித் தாபனத்தின் இளைப்பாற்றிச் சம்பள விதானங்களுக்கு அல்லது விதிகளுக்கு அமைவாக இருக்கும்.

(இ) இளைப்பாற்றிச் சம்பளத்துக்குரிய பதவிகளுக்கு நியமிக்கப்படும் பெண்களல்லாத ஏனையோர் யாவரும், 55 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களும், உள்ளூராட்சிச் சேவைக்கு நியமிக்கப்படும் திகதிக்கு நேர்முந்திய திகதியில் அரசாங்க சேவையில் இளைப்பாற்றிச் சம்பளத்துக்குரிய பதவிகளில் இருந்தவர்களும் 1952 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30 ஆம் திகதி வெளியான 10,329 ஆம் இலக்க அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை விதவைகள் அநாதைகள் இளைப்பாற்றிச் சம்பள நிதிப் பிரமாணங்களின்படி தாபிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவை விதவைகள் அநாதைகள் இளைப்பாற்றிச் சம்பள நிதிக்குத் தங்கள் சம்பளத்தில், 4 சத விகிதத்தைச் செலுத்தவேண்டும். குறித்த உள்ளூராட்சித் தாபனம் உத்தியோகத்தரின் சம்பளத்தில் 3 சத விகிதத்தைச் செலுத்தும்.

(ஈ) நியமிக்கப்படுபவர்கள், குறித்த உள்ளூராட்சித் தாபனம் நிர்ணயிக்கும் தொகைக்கு உரொக்கமாக அல்லது உள்ளூராட்சிச்சேவை அதிகார சபை அங்கீகரிக்கும் உத்தரவாதச் சங்கம் ஒன்றின் மூலமாக நம்பிக்கை உத்தரவாத முறி கொண்டு பிணை செலுத்துமாறு வேண்டப்படலாம்.

(உ) உள்ளூராட்சிச் சேவையில், அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்காதவர்களாயிருந்து நியமிக்கப்படுபவர்கள், இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவை செய்வதற்கு வேண்டிய தேக தகுதியுடைமை விடயமாக முறையான தகைமைபெற்ற வைத்தியர் ஒருவரின் வைத்தியப்பரிசோதனையிற் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர்.

(ஊ) வேறுவிதம் குறிக்கப்பட்டாலன்றி, நியமனம், பொதுவாக, இரண்டாண்டு காலத்துக்கு தகுதிகாண் நிலையிலிருக்கும் அல்லது இரண்டாண்டு காலத்துக்குப் பின்னர் உறுதிப்படுத்தப்படுவதற்கு அமைவானதாயிருக்கும்.

(எ) விண்ணப்பிப்பவர்கள் தங்கள் வயதுக் கத்தாட்சியாக தமது பிறப்புப் பதிவுச் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பங்களுடன் அனுப்ப வேண்டும். சத்தியக்கடதாசிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. பிறப்புப் பதிவுச் சான்றிதழ்ப் பிரதிகள் சேர்த்து அனுப்பப்படாவிட்டால் விண்ணப்பிப்பவர்கள் அருகதையற்றவர்களாகக் கருதப்படுவர்.

4. **புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.**—(i) எப்பதவிக்கேனும் நீடிய காலம் விதிக்கப்பட்டாலன்றி, காரியத்துக்கேற்ப, இளைப்பாற்றிச் சம்பளமுள்ள பதவிகளில்/இளைப்பாற்றிச் சம்பளமில்லாத பதவிகளில் நியமிக்கப்படும் " புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்"களின் தகுதிகாண் நிலை/பரீட்சார்த்த காலம் இரண்டு ஆண்டுகளாயிருக்கும்.

(ii) " புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் " அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை வினைப்படுத்துதற்கும் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச் சட்ட ஏற்பாடுகளைச் செயற்படுத்துதற்குமாக ஏற்கனவே ஆக்கப்பட்ட அல்லது இனிமேல் ஆக்கப்படும் விதிகள் எதற்கும் அமைந்தொழுகுமாறு வேண்டப்படுவர்.

(iii) (அ) இந்த உத்தியோகத்தர்கள் அவர்களின் தகுதிகாண் நிலை/பரீட்சார்த்த காலத்தில் சிங்கள மொழியில் தேர்ச்சிபெறுமாறு வேண்டப்படுவர்.

(ஆ) தகுதிகாண் நிலை/பரீட்சார்த்த கால முடிவில் அவர்களின் நியமனம் உறுதிப்படுத்தப்படுகின்றமை, பிறவற்றோடு, சிங்களத்தில் தேர்ச்சிகாண் பரீட்சையொன்றில் சித்தியெய்துவதைப் பொறுத்ததாயிருக்கும்.

அவர்களின் தகுதிகாண் நிலை/பரீட்சார்த்த காலத்தில் சிங்கள மொழியில் விதிக்கப்பட்ட தேர்ச்சித் தரத்தை அடையத் தவறுவோர் பதவி நிறுத்தம் செய்யப்படுதற்குப் பாத்திரராவர். எனினும், உத்தியோக மொழியில் தேர்ச்சி பெறுவதற்கு நிசமாகவே முயற்சிக்கப் பட்டிருக்கின்றதென்று உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை நம்புமேயானல் பதவி நிறுத்தம் பின்போடப்படலாம். உரிய திகதிக்குப் பின்னர் ஒரு நியாயமான காலத்துக்குள் அந்த உத்தியோகத்தர் அப்பரீட்சையில் சித்தியெய்தினுல் அதிகார சபையின் உசிதப்படி முதுமுறை நட்டத்தை தள்ளிவிடலாம்.

(i) சிங்களமொழி மூலம் உள்ளூராட்சிச் சேவையில் புகும் தகைமை பெறும் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் சிங்களத்தில் நடக்கும் தேர்ச்சிகாண் பரீட்சையிலிருந்து தவிர்த்துவிடப்படுவர்.

**குறிப்பு.**—இதில் " புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் " என்பது 1960 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிரசுரமாகும் விளம்பரங்களின் மூலம் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளில் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் எனப் பொருள்படுகின்றது.

5. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதை திருப்திகரமாக நிரூபிக்கவேண்டும். உள்ளூராட்சிச் சேவைக்கு ஆட்சேர்த்தல் பற்றிய சகல தேவைகட்கும் " இலங்கையர் " என்னும் பதத்திற்கு வம்சாவழியில் அல்லது பதிவுமூலம் இலங்கைப் பிரசையாகவுள்ளவர் என்று வரைவிலக்கணம் கூறப்படுகிறது.

6. **போர்ச் சேவைச் சலுகை.**—மாட்சிமை தங்கிய மகாராணியின் போர்ப் படைகளிற் சேவைசெய்தவர்களும், நெருப்பணைக்கும் துணைச்சேவை, விமானத் தாக்கப் பாதுகாப்புச் சேவை, உள்ளூர்ப் பாதுகாப்புச் சேவை ஆகியவற்றில் (தாமாக இச்சேவைகளைவிட்டு விலகியோர் நீங்கலாக) முழு நேரம் கடமையாற்றியவர்களும், இதர விடயங்கள் அனைத்திலும் தகைமையுடையவர்களாக இருப்பார்களேயானல், உள்ளூராட்சிச் சேவையில் சேருவதற்கு வேண்டிய வயதுத் தகைமையின்பொருட்டு மாத்திரம் அச்சேவைக் காலத்தை (1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதிக்கு அப்பாற்படாத ஒரு திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு இப்பாற்படாத ஒரு திகதிவரை) தமது வயதிலிருந்து கழித்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். எனினும் அவர்கள் 1945 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் படைகளிற் சேர்ந்தவர்களாகவும் அச்சேவையை திருப்திகரமாகவும் இடையருமலும் செய்தவர்களாயும் இருக்கவேண்டும்.

7. **வயதுச் சலுகை.**—உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள், எவ்வயதினராயிருந்தாலும், விளம்பரப்படுத்தப்படும் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு அருகதையுடையோராவர்.

8. விளம்பரப்படுத்தப்படும் பதவியையொத்த அதே வகுப்பிலும் தரத்திலும் இருக்கும் உள்ளூராட்சிச் சேவை உத்தியோகத்தர்கள், கல்வித் தகைமைகளில்லாதிருந்தாலும், விளம்பரப்படுத்தப்படும் வெற்றிடத்துக்கு மாற்றும்படி விண்ணப்பிப்பதற்கு அருகதையுடையோராவர்.

9. **வேண்டற்பால எனேயவை.**—(i) உள்ளூராட்சித் தாபனமொன்றில் கடமையாற்றுபவர்களின் விண்ணப்பங்கள், அவர்கள் கடமையாற்றும் உள்ளூராட்சித் தாபனத்தின் மாநகர சங்க அதிகாரி அல்லது தலைவர் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(ii) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தரின் விண்ணப்பங்கள், அவ்வப்பகுதிகளின் தலைவர்கள் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுடைய விண்ணப்பங்களின் விடயத்தில், விண்ணப்பகாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுதற்குத் தாம் தயாரா இல்லையா என்பதைச் சம்பந்தப்பட்ட பகுதியின் தலைவர் விண்ணப்பத்தை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

(iii) குறிக்கப்படும் ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுமாறு அபேட்சகர்கள் வேண்டப்படலாம். இதன் பொருட்டு பிரயாணச் செலவுகளோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டா.

(iv) அபேட்சகர் ஒருவரைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவரும் ஒரு குணச்சான்றிதழைக் கொடுப்பதன்மூலம் அதனைச் செய்யலாம். அபேட்சகர் ஒருவருக்குச் சாதகமாக நேர்முகமாகவேனும் மறைமுகமாகவேனும் எவ்விதமான ஆதரவும் தேடுதலேனும் அபேட்சகர்கள் தெரிந்தெடுக்கப் படுதற்கு எவ்விதமான முயற்சியும் செய்தலேனும் அவ்வபேட்சகர்களுக்குத் தகைமையின்மையை உண்டாக்கும்.

(v) விண்ணப்பத்தில் உள்ள கூற்றெதுவும் செம்மையற்றதென்று தெரிவுக்கு முன்னர் காணப்படின் விண்ணப்பதாருக்கு தகைமையீனத்தை உண்டாக்கும் ; தெரிவிக்குப் பின்னர் காணப்படின் அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்குப் பாத்திரராவர்.

(vi) இவ்விளம்பரத்தில் வேண்டப்படுவனவற்றுக்கு சகல வகைகளிலும் இணக்கமாயில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(vii) கீழே தந்துள்ள முறையில் விண்ணப்பங்களை எழுதி உள்ளூராட்சிச் சேவை அதிகார சபைத் தலைவர் என்று விலாசமிடுதல் வேண்டும். அவருடைய பெயருக்கு அவற்றை **அனுப்பலாகாது.**

(viii) முடிவுத் திகதிக்குப் பின்னர் இக்கந்தோரில் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் சாதாரணமாக கவனிக்கப்படமாட்டா.

---

**வேறுவிதம் கூறப்பட்டாலன்றி உபயோகிக்கப்பட வேண்டிய விண்ணப்ப மாதிரிப் பத்திரம்**

**உள்ளூராட்சிச் சேவை**

**முக்கியமாக கவனிக்க.**—(i) விண்ணப்பத்தை கீழே விதித்துள்ள முறையில் எழுதி, பதவி பற்றிய வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் சொல்லப்படும், விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் **தலைவர், உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை, தபாற் பெட்டி 530, கொழும்பு 1** என்ற விலாசத்தை அடையும் வண்ணம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை தலைவரின் பெயருக்கு விலாசமிட்டு அனுப்பலாகாது.

(ii) விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களை சித்தஞ் செய்யுமுன்னர் மேற்போந்த பொது நிபந்தனைகளையும் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் வேண்டுதல்களையும் கவனமாக வாசித்து விண்ணப்பிப்பதற்குத் தாங்கள் சகல வகைகளிலும் அருகதையுடையவர்கள்தான் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகின்றது. விண்ணப்பகாரர் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலை உசாவி உரிய சகல தகவல்களையும் தவருது கொடுக்கவேண்டும்.

(iii) விண்ணப்பகாரர் கீழ்க்காணும் சாதனங்களின் **பிரதிகளை** அவர்களின் விண்ணப்பத்துடன் இணைக்கவேண்டும் :—(1) பிறப்புச் சான்றிதழ், (2) ஆங்கிலத்தில்/சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய ஆக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ், (3) குணச்சான்றிதழ், (4) பதவி ; அத்தகைய தன்மையதாயின் உயர் தொழில்/தொழில்நுட்ப தகைமைகளின் சான்றிதழ்.

(iv) விண்ணப்பகாரர் மேற்போந்த பொது நிபந்தனைகளின் 9 ஆம் பந்தியை விசேடமாக கவனிக்குமாறு வேண்டப்படுகின்றுர்கள்.

........................................(........) **பதவிக்கான விண்ணப்பம்.**

1. வெற்றுப் பதவி விளம்பரப்படுத்தப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையின் திகதி : ————.

2. முழுப் பெயர் (தனித்தனி எழுத்துகளில்) : ————.

   தேசிய இனம் : ————.

   (மேலேயுள்ள 5 ஆம் நிபந்தனையில் கூறப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின்படி இலங்கையரா இலங்கையரல்லாதாரா என்பதைக் கூறுக. நீர் பதிவு மூலம் இலங்கைப் பிரசையாகியிருப்பின் பிரசாவுரிமைச் சான்றிதழின் சார்பு எண்ணையும் திகதியையும் கூறுக.)

3. தபால் விலாசம் : ————.
   (விலாசமாற்ற மெதுவும் உடனே அறிவிக்கப்பட வேண்டும்)

4. (அ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதியில் சரியான வயது :—

   ........ வருடங்கள் ........ மாதங்கள் ........ நாட்கள்.

   (ஆ) பிறந்த திகதி : ————.

5. பிறந்த இடம் :—

   (அ) விண்ணப்பகாரர் : ————.

   (ஆ) அவரது பிதா : ————.

   (இ) அவரது பிதாவழிப் பேரன் : ————.

   (ஈ) அவரது பிதாவழிப் பாட்டன் : ————.

   (விண்ணப்பகாரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன், ஒன்றில் (ஆ) வை அல்லது (இ) யையும் (ஈ) யையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பகாரர் இலங்கையில் பிறவாதவராயின் (அ) வோடு, ஒன்றில் (ஆ) வையும் (இ) யையும் அல்லது (இ) யையும் (ஈ) யையும் நிரப்புதல் வேண்டும்.)

6. விவாகமானவரா, தனியாளா, தாரமிழந்தவரா அல்லது கைம்பெண்ணா : ————.

7. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகளும், கல்லூரிகளும் மற்றும் தாபனங்களும் :—

| பொதுக் கல்வி | | | உயர் தொழிற்/தொழினுட்ப கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | சேர்ந்த திகதி | விட்ட திகதி | தாபனம் | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
| 1. . . . . . . . . . . . . . . . . | . . . . . . | . . . . . . | . . . . . . . . . . . . . . | . . . . . . | . . . . . . |
| 2. . . . . . . . . . . . . . . . . | . . . . . . | . . . . . . | . . . . . . . . . . . . . . | . . . . . . | . . . . . . |
| 3. . . . . . . . . . . . . . . . . | . . . . . . | . . . . . . | . . . . . . . . . . . . . . | . . . . . . | . . . . . . |
| 4. . . . . . . . . . . . . . . . . | . . . . . . | . . . . . . | . . . . . . . . . . . . . . | . . . . . . | . . . . . . |
| 5. . . . . . . . . . . . . . . . . | . . . . . . | . . . . . . | . . . . . . . . . . . . . . | . . . . . . | . . . . . . |

8. கல்வித் தகைமைகளும் திகதியுடன், கடைசியாக சித்தியெய்திய பரீட்சையும்—

(அ) சிங்களம் : ————.

(ஆ) ஆங்கிலம் : ————.

(இ) தமிழ் : ————.

9. பெற்றுள்ள ஏதும் உயர் தொழில் அல்லது தொழினுட்ப அல்லது இருவகைத் தகைமைகளையும் திகதிகளுடனும் தாபனங்களுடனும் பெயர்களுடனும் தருக : ————.

10. கல்வி பயின்ற பாடசாலையும் அதைவிட்ட திகதியும் : ————.

11. (அ) பாடசாலையை விட்டபின்னர் வகித்த உத்தியோகம் (வகித்த பதவிகளை அவற்றில் சேர்ந்த, அவற்றை விட்ட திகதிகளுடன் தருக) : ————.

(ஆ) நிரந்தரமாகவேனும் தற்காலிகமாகவேனும் அரசாங்கத்திலாவது உள்ளூராட்சித் தாபனத்திலாவது உத்தியோகத்திலிருந்து அந்த உத்தியோகம் எச்சமயத்திலேனும் நிறுத்தப்பட்டிருப்பின், சேவை நிறுத்தப்பட்டமைக்கான காரணத்தை திகதிகளுடன் விபரமாக விளக்குக : ————.

(இ) உள்ளூராட்சிச் சபைகளில் பார்த்த உத்தியோக விவரம் (பதவி, உள்ளூராட்சித் தாபனம், காலம்) :————,

(ஈ) தற்போதைய உத்தியோகம் பற்றிய பின்வரும் விவரங்களைக் கூறுக :—

(i) உத்தியோக பதவிப்பெயரும் அதன் தரமும் அதில் நியமிக்கப்பட்ட திகதியும் : ————.

(ii) தற்போதைய சம்பளமும் (படிகள் நீங்கலாக) சம்பள அளவுத் திட்டமும் : ————.

(iii) இளைப்பாற்றிச் சம்பளமுண்டா ?:————.

(உ) முன்னைநாட் போர் வீரராயின் இருந்த படைப்பிரிவு, வரிசைப் பதவி ஆகியவற்றின் விவரங்களும் சேர்ந்த, விடுபட்ட திகதிகளும் : ————.

12. இம்மொழிகளில் வாசிக்கும், எழுதும், பேசும், பேச்சை மொழி பெயர்க்கும் தேர்ச்சியுண்டா ?:—

(அ) சிங்களம் : ————.

(ஆ) தமிழ் : ————.

13. விசேட தகைமைகள் (விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகள் அல்லது அனுபவம் அல்லது இவை இரண்டும் உமக்குண்டா ? உண்டெனில் அவற்றின் முழு விவரங்களையும் திகதிகளுடன் தருக) :————.

14. ஒரு நீதிமன்றத்தில் ஏதும் கிறிமினல் குற்றத்தின் பொருட்டு தண்டிக்கப்பட்ட துண்டா ? உண்டெனில், அவ்வழக்கின் திகதியையும் குற்றத் தீர்ப்பின் தன்மையையும் தருக :————.

15. கடன் தொல்லையில்லாதிருக்கின்றீரா ? இல்லையாயின் எவ்வளவுக்கு கடனாளியாக இருக்கின்றீர் : ————.

16. வேறு ஏதும் விவரங்கள் (விசேட உரிமைக் கோரிக்கைகள் ஆதியன): ————.

17. யார் யாரிடமிருந்து குணச்சான்றிதழ்கள் பெறப்பட்டிருக்கின்றனவோ அவர்களின் பெயர்களும் உத்தியோக பதவிப் பெயர்களும் (அச்சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை இணைக்காது நகல் பிரதிகளையே இணைத்தல் வேண்டும். அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்கும் உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள் இந்த வேண்டுதலை நிறைவேற்ற வேண்டியதில்லை : ————.

விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விவரங்கள் உண்மையானவையென்றும் செம்மையானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதிலடங்கியுள்ள விவரங்களெதுவும் பொய்யானவை அல்லது செம்மையில்லாதவை எனக்காணின், தெரிவுக்கு முன்னர், தகைமை நீக்கத்துக்கும், பின்னர் அச்செம்மையின்மை கண்டுபிடிக்கப்படின், எனக்கு நட்டஈடு ஏதுவுமின்றி, வேலை நீக்கத்துக்கும் நான் பாத்திரமாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ————.

தலைவர் அவர்கட்கு,
உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை,
தபால் பெட்டி 530, கொழும்பு 1,

---

## உள்ளூராட்சிச் சேவை

### ஆயுள்வேத வைத்தியர் பதவி, தரம் II (F)

மேற்படி பதவிக்கு உள்ளூராட்சிச் சேவை அதிகார சபையால் விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. தெரிவு செய்யப்படும் அபேட்சகர் முதலில் புங்குடுதீவு கிராமச் சங்கத்தில் நியமிக்கப்படுவார்.

**2. சம்பளம்.** : இப்பதவிக்குரிய சம்பளம் வருடமொன்றுக்கு ரூ. 960—17—72—ரூ. 2,184 ஆகும். சம்பளம் வருடமொன்றுக்கு ரூ. 1,608 ஆவதற்கு முன்னர் திறமைத்தடைப் பரீட்சையுண்டு.

**3. தேவையான தகைமைகள் :**

(அ) விண்ணப்பகாரர், 1949 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க சுதேச வைத்திய திருத்தச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் ;

(ஆ) விண்ணப்பகாரர், இலங்கை சுதேசவைத்திய, சத்திர வைத்திய தகுதித் தேர்வுப்பத்திரமேனும் (டிப்ளோமா) இந்தியாவில் அல்லது இலங்கையில் உள்ள அங்கீகாரம் பெற்ற ஒரு ஆயுள் வேதக்கல்லூரியின் இதற்குச் சமமான அல்லது கூடுதலான தகைமைகளேனும் பெற்றவராயும், தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்றபின்னர் பொது ஆயுள்வேத வைத்தியத் தொழிலில் 7 வருடங்களுக்குக் குறையாத அனுபவமுடையவராயும் இருத்தல் வேண்டும். 1953 ஆம் ஆண்டு செப்ரெம்பரிலிருந்து இறுதிப் பரீட்சையில் சித்தியெய்திய சுதேச வைத்திய, சத்திர வைத்திய தகுதித் தேர்வுத் தராதரப் பத்திர (D.I.M.&.S.) (இலங்கை) பட்டதாரிகளில் புதிய திட்டப்படியான பயிற்சியைப் பெற்றுள்ளவர்கள், தகுதித் தேர்வுத் தராதரப் பத்திரம் பெற்றபின்னர் வைத்திய அனுபவம் எதுவும் பெற்றிருத்தலிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளனர்.

(இ) மேற்கூறிய தகைமைகள் இல்லாத அங்கீகாரம் பெற்ற ஆயுள்வேத வைத்தியர்களின் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படும். ஆனால், அவர்கள் பொது ஆயுள்வேத வைத்தியத்தில் 10 வருடங்களுக்குக் குறையாத அனுபவமுடையவர்களாயும், பிரசித்தி பெற்ற குருவைத்தியர் ஒருவரிடம் ஐந்து வருடங்களுக்காவது சிட்சை பெற்றபின்னர் பிரபல்யமாகத் தொழில் நடத்துபவர்களாயும் இருத்தல் வேண்டும். இத்தகைய விண்ணப்பகாரர் இதற்குச் சான்றாக அவ்வப்பிரிவின் பிரிவுக் காரியாதிகாரியிடமும், குரு வைத்தியரிடமும் பெற்ற சான்றிதழின் பிரதிகளை அவர்களின் விண்ணப்பங்களுடன் இணைத்தல் வேண்டும்.

(ஈ) சித்தவைத்திய முறை தெரிந்திருத்தல், கூடுதலானதோர் தகைமையாகும்.

4. தெரிவு செய்யப்படும் அபேட்சகர் சொந்தத்தில் தொழில் நடத்துவதினின்றும் தடுக்கப்படுவார். அவர், கடமையாற்றும் மருந்துச்சாலைக்கு அண்மையில் வசிக்குமாறு வேண்டப்படுவார்.

5. விண்ணப்பகாரர் கீழ்க்காண்பவற்றின் பிரதிகளை (மூலப்பிரதிகளையல்ல) அவர்களின் விண்ணப்பங்களுடன் இணைத்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (ஞானஸ்நானச் சான்றிதழேனும், உதவி பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணங்களின் பொருட்டு வழங்கும் சான்றிதழ்களேனும், அல்லது சத்தியக் கடதாசிகளேனும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா);

(ஆ) பொது ஆயுள்வேத வைத்தியத் தொழிலில் அனுபவமுண்டென்பதற்குச் சான்ருன, தொழில் நடத்தும் கால அளவைக் குறிப்பிடும், அப்பிரிவின் பிரிவுக் காரியாதிகாரியின் சான்றிதழ்.

6. இந்த அரசாங்க வர்த்தமானியின் 4 ஆம் பாகத்தின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சிச் சேவைப் பதவிகளுக்கு நியமனங்கள் செய்தல் சம்பந்தமான நிபந்தனைகளைப் பார்க்கவும்.

7. விண்ணப்பங்கள், நியமனங்கள் செய்தல் சம்பந்தமான பொது நிபந்தனைகளின் இறுதியிற் சேர்க்கப்பட்டுள்ள பத்திரத்தின் மாதிரியில், எழுதப்பட்டு 1960 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் திகதிக்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்கவேண்டும். குறித்த பத்திரத்தில் 13 ஆம் விடயத்துக்குப் பதிலாக பின்வருவன வைக்கப்படல் வேண்டும்.

"13. (1) தகைமைகள் பெற்றபின்னர், பொது ஆயுள்வேத வைத்தியத் தொழிலை தீவிரமான முறையில் நடத்த ஆரம்பித்த திகதி. சான்ருகச் சான்றிதழ்களை அணைக்க.

(2) ஆயுள்வேதத்தின் எப்பிரிவிலேனும் விசேட திறமையுண்டா? உண்டெனில் விபரங்கள் தருக.

(3) ஆயுள்வேதத்தில் தகைமைகள் (பெற்ற சான்றிதழ்களின் பிரதிகளை அணைக்க) :

(4) மேற்படி தகைமைகளை வழங்கிய ஆயுள்வேதக் கல்லூரி ;

(5) அத்தகைமைகளைப் பெற்ற திகதி :

(6) 1949 இன் 49 ஆம் இலக்க சுதேசவைத்தியத் திருத்தச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்படியான " பொது இடாப்பில் " அல்லது " விசேட இடாப்பில் " உள்ள பதிவு எண் ;

(7) சித்த வைத்திய முறை தெரியுமா ?"

8. விண்ணப்பங்களும் அதுசம்பந்தப்பட்ட இதர கடிதங்களும் உள்ளூராட்சிச் சேவை அதிகார சபைத் தலைவரின் விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டுமேயன்றி, இப்பகுதியிலுள்ள உத்தியோகத்தர் எவரதும் சொந்த விலாசத்துக்கு **அனுப்பப்படலாகாது.**

9. அரசாங்க சேவையிலேனும் அல்லது ஒரு உள்ளூராட்சிச் சபையின் சேவையிலேனும் உள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து, விதிக்கப்பட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள், பகுதித் தலைவராலேனும், அல்லது மாநகரசங்க அதிகாரியாலேனும், அல்லது உள்ளூர் அதிகாரத் தாபனத் தலைவராலேனும் விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவ்விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு தாமதித்தமைக்குத் தகுந்த காரணம் கற்பித்து, ஏற்றுக்கொள்ளப்படவேண்டுமென்று, பகுதித் தலைவரேனும், மாநகர சங்க அதிகாரியேனும், உள்ளூராட்சித் தாபனத்தின் தலைவரேனும் சிபார்சு செய்தாலன்றி கவனிக்கப்படமாட்டா.

10. எல்லா விண்ணப்பங்களும் கிடைத்தமை அறிவிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் விண்ணப்பங்கிடைத்தமை அறிவிக்கப்பெருத விண்ணப்பகாரர் எவரும், உள்ளூராட்சிச் சேவை அதிகார சபைச் செயலாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி நடக்கத் தவறினுல், விண்ணப்பகாரரின் கோரிக்கை எதுவும் கவனிக்கப்பட்மாட்டாது.

வி. சி. ஜயசூரியா,
தலைவர்,
உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை.

உள்ளூராட்சிச் சேவை அதிகார சபைக்காரியாலயம்,
தபாற்பெட்டி 530, கொழும்பு,
ஜூலை 11, 1960.

---

# நாஞூவிதம்

**இறைச்சிக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்**

இறைச்சிக்காரர் பற்றிய சட்டம் 1947 ம் ஆண்டின் 44 ம் இலக்க 7 ம் தாற்பரியப்படி பின்காணும் பெயர்வழிகாரரிடமிருந்து 1960 ம் ஆண்டு புச்சர் லைசென்ஸ் தரும்படி விண்ணப்பம் கிடைத்திருக்கிறது. இக்கிராமச் சங்க இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் குறிக்கப்பட்ட லைசென்ஸ் கொடுப்பதை மறுக்கவிரும்பின் மறுப்புக்கான காரணங்களை 1960 ம் ஆண்டு ஆடி மாதம் 24 ந திகதிக்குள் இணைப்பிரதிகளாக எமக்கு அனுப்பிவைக்கும்படி இத்தால் அறிவிக்கப்படுகிறது.

விண்ணப்பகாரர் பெயர் : அபூவக்கர், மீராலெவ்வை ; விலாசம் : பெரிய நீலாவணை, 2 ம் குறிச்சி ; வியாபாரம் செய்யுமிடம் : நாய்ப்பட்டி முனை மார்க்கட் ; செய்யும் தொழில் : மாட்டிறைச்சி.

க. குஞ்சித்தம்பி,
கி. ச. அக்கிராசனர், J. P.
கரவாகு மேற்கு, சேனைக்குடி.

கி. ச. காரியாலயம்,
கரவாகு மேற்கு,
1960 ம் ௵ ஜூலை ௴ 7 ந் உ.

---

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.